IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 101/2018 |
| | | P/W's | : | PW1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | ஆனந்தன் | CASTE | : | |
| S/O | முத்து இருளக்கோனான் | RELIGION | : | இந்து |
| VILLAGE | வலையப்பட்டி | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 35 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.02.2026**

<u>குறுக்கு விசாரணை</u>

1. எனது பூர்வீகம் மதுரை திருப்பாலை என்றால் சரிதான். எனது தந்தை காலத்தில் வலையப்பட்டியில் குடிவந்தோம் என்றால் சரிதான். வலையப்பட்டி கிராமத்தில் வைத்துதான் எனது தந்தைக்கு திருமணமாகி நான் பிறந்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணத்தின்படி வீரணக்கோனார் மகன் முத்திருளக்கோனாரிடமிருந்து கருப்பணக்கோனார் மகன் வெயிலங்கோனார் என்பவர் 2 நத்தம் மனையையும், 4 ஏக்கர் புஞ்சை நிலத்தையும் கிரையம் பெற்றார் என்றால் சரிதான்.

2. மேற்படி ஆவணத்தில் மேற்படி சொத்துக்களை ஆவண எண் 432–ன்படி 1923ம் ஆண்டு முத்திருள கோனார் இருளாயி அம்மாளுக்கு 500 ரூபாய்க்கு ஒத்தி வைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்குத்தெரியாது. வா.சா.ஆ.13 ல் உள்ள சொத்துக்கள் முத்திருள கோனாருக்கு பாத்தியப்பட்டது என்பதால்தான் அதை அவர் 1923ம் ஆண்டு ஒத்தி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. நானும் எனது தகப்பனாரும் வலையப்பட்டி கிராமத்தில் வசிக்கவில்லை என்பதால்தான் மேற்படி சங்கதிகள் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.14 ஆவணம் வெயிலங்கோனார் வா.சா.ஆ.13 ன்படி வாங்கிய 2 நத்தம் மனையிடங்களை அவரது மகன்கள் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். மேற்படி 2 நத்தம் மனையிடங்களை வெயிலங்கோனார் அவர் கிரையம் பெற்றதிலிருந்து அனுபவம் செய்து அவருக்குப்பின் அவர் மகன்கள் அனுபவம் செய்து, அதை 2ம் பிரதிவாதி கிரையம் பெற்றதிலிருந்து அவர் அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 ஆவணத்தில் வெயிலங்கோனார்

மகன்கள் அவர்களின் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்தைதான் விற்பனை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. மேற்படி பத்திரங்களில் உள்ள நத்தம் மனைகளுக்கு எப்போது சர்வே எண் கொடுத்தார்கள் என்று எனக்குத்தெரியாது. மேற்படி நத்தம் மனையிடங்களின் சர்வே எண் யூடிஆர் திட்டத்தின்போது பழைய வலையப்பட்டி கிராம சர்வே எண் 270/1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தின் வடபுறம் நடைபாதையாக இருந்து பின்பு வண்டிப்பாதையாக மாற்றப்பட்டு தற்போது தார்சாலை போடப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாதையை இட்டறைப்பாதை என்று சொல்வார்கள் என்றால் சரிதான்.

5. 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற இடத்திற்கு கிழக்குப்பக்கம் இராசு வீடும் காலிமனையும் உள்ளது என்றால் சரிதான். எனது தந்தை பெயர் சாமியார் என்ற முத்திருளக்கோனார். 2ம் பிரதிவாதி 1996, 1997 ல் கிரையம் வாங்கிய சமயத்தில் நான் குடியிருந்த வீடு கூரை வீடாக இருந்தது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய இடத்திற்கு மேற்குப்பக்கம் கா. முத்திருளக்கோனார் என்பவரின் கூரைவீடும் காலிமனையும் இருந்தது என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.14 ஆவணத்தின்படி மேற்படி நான்குமாலில் அமைந்திருந்த 30x 30 அடி சொத்தை 2ம் பிரதிவாதி 1997 ல் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல, மேற்படி ஆவணம் ஈடுகடன் பத்திரமாகும். 2ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய விவரம் எனக்கு 2018 ல் தெரியும். வா.சா.ஆ.14 ஆவணத்தில் உள்ள சொத்தின் தற்போதைய சர்வே எண் 599/6, 599/7 ல் கட்டுப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணிற்கான பட்டா வெயிலங்கனுக்கு கிரையம் கொடுத்த முத்திருள கோனார் என்பவர் பெயரில் இருந்தது என்றாலும் அவருடைய பெயருக்கும் எனது தந்தையின் பெயருக்கும் உள்ள ஒற்றுமையை பயன்படுத்தி அவர்கள் ஊரில் இல்லாத சமயத்தில் எனது தந்தை அந்த சொத்தை அனுபவம் செய்துவந்தார் என்றாலும் சரியல்ல.

7. வா.சா.ஆ. 5 ஆவணம் எனது தந்தையார் இறந்தபிறகு எழுதப்பட்டது என்றால் சரிதான். வழக்குச்சொத்திற்கு வா.சா.ஆ.5 ஆவணம் ஏற்படுவதற்குமுன் முத்திருளக்கோனார் என்ற பெயரில் இருந்த பட்டாவை தவிர வேறு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். எனது தந்தை அவர் குடியிருந்த இடத்தில் இருந்த

கூரை வீட்டை இடித்துவிட்டு காரை வீடு கட்டினார் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணம் வழக்கை தாக்கல் செய்வதற்கு 3 மாதங்களுக்குமுன் நான்குமாலை தவறாக காட்டி வழக்குச்சொத்தை அபகரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

8. எனது வீட்டிற்கு வடபுறம் 2ம் பிரதிவாதி வா,சா.ஆ.14ன்படி கிரையம் வாங்கிய இடம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் அந்தச்சொத்தின் வடபுறம் ஞானசேகர் காலிமனையிடம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனது வீட்டின் மேற்புரம் 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய காலியிடம் உள்ளது என்றாலும் அதற்கு மேற்குப்புறம் தான் முத்திருளக்கோனாரின் காலிமனை உள்ளது என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கும் கண்ணுச்சாமி காலிமனையிடத்திற்கும் தென்புறம் சிமெண்ட் வீதி உள்ளது என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ.5 ஆவணத்தில் கிழக்கு நான்குமாலும் தெற்கு நான்குமால் மட்டும்தான் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் வடக்கு மற்றும் மேற்கில் பிரதிவாதிகளின் சொத்தை அபகரிப்பதற்காக தவறாக நான்குமால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீட்டின் கிழமேல் அளவு 13 அடி, தென்வடல் அளவு 22 அடி. மேற்படி வீடு உள்ள இடம் மட்டும்தான் எனது அனுபவத்தில் உள்ளது என்றாலும் அதன் உரிமை சம்பந்தமாக எனக்கும் முத்திருள கோனாருக்கும் பிரச்சனை என்றாலும் அதற்கு வடக்கு மற்றும் மேற்கில் பிரதிவாதிகளின் இடம் உள்ளது என்றாலும் சரியல்ல.

10. வா.சா.ஆ.5 ஆவணத்திற்கு முன்பும் பின்பும் உள்ள காலங்களில் தாக்கல் செய்யப்பட்ட வரி ரசீதுகளும், மின்சார ரசீதுகளும் வழக்குச்சொத்தில் எனது உரிமையை காட்டும் ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி எனது வீட்டிற்கு பின்புறம் உள்ள இடத்தை கிரையம் வாங்கிய விவரம் 2018ல் எனக்குத்தெரியும் என்றாலும் அவரை வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் வழக்குத்தாக்கல் செய்தேன் என்றாலும் சரிதான். 2ம் பிரதிவாதி அவராகவே மனு தாக்கல் செய்து வழக்கில் சேர்ந்துள்ளார் என்றால் சரிதான். அவரை வழக்கில் சேர்த்த உத்தரவுக்கு எதிராக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்து தள்ளுபடியாகிவிட்டது.

11. 2ம் பிரதிவாதி வழக்குச்சொத்தில் எனது உரிமையை மறுத்த பின்னும் அவரது கிரையப்பத்திரத்திற்கு எதிராக விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றாலும் அவருக்கு எதிராக தாவா சொத்தில் எனது உரிமையை பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கை திருத்தம் செய்யவில்லை என்றாலும் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் தாவா சொத்திற்கான 1949 முதல் 2018 வரையுள்ள நான்கு வில்லங்க சான்றிதழ்கள் என்றால் சரிதான். மேற்படி வில்லங்க சான்றிதழ்களில் நானோ எனது அப்பாவோ வழக்குச்சொத்தை கிரையம் பெற்றதாக குறிப்பு இல்லை என்றால் சரிதான்.

12. வா.சா.ஆ.13, வா.சா.ஆ.14 ஆவணங்கள் பற்றிய குறிப்பு மேற்படி வில்லங்க சான்றிதழ்களில் உள்ளது என்றால் குறிப்பு உள்ளது ஆனால் அதில் வா.சா.ஆ.14 பற்றி தவறாக உள்ளது. வா.சா.ஆ.14 ஆவணத்திற்கு எதிராக வழக்கில் நான் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். மேற்படி **வில்லங்க சான்றிதழ்கள் (4 எண்ணம் ) – சான்றிட்ட நகல்– பி.வா.சா.ஆ.1 குறியீடு செய்யப்படுகிறது.** வழக்குச்சொத்து சம்பந்தமாக பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

13. தாவா சொத்தின் 286 சதுரடியான முத்திருளக்கோனாரின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்து வழக்கில் அவரது வாரிசுகளை சேர்க்காத காரணத்தினால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. முத்திருளக்கோனாருடன் எனது தகப்பனாரின் பெயரில் உள்ள ஒற்றுமையை பயன்படுத்தி வழக்குச்சொத்தை அபகரிக்க நினைப்பதால் வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/– M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.